Regd. No. M. 4593.

"KUDI ARASU"

12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி அணா 0-1-6

வருட சந்தா ரூ. 5.

சனி வெளியீடு.

மலர் 18 | சனிக்கிழமை 15-9-1946 ஆவணி மீ 30உ | இதழ் 49

## நவராத்திரி

நவராத்திரி என்ற பதம் ஒன்பது இரவு எனப் பொருள்படும். இது புரட்டாசி அமாவாசைக்குப் பின்னர் உள்ள நவமியை இறுதியாக உடைய ஒன்பது நாட்கள் இரவிலும் இந்துக்களால் கொண்டாடப்படும் ஓர் பெரிய உற்சவம். இந்நாட்களின் ஆரம்பத்தில் தத்தம் நிலைக்கேற்ப பதுமைகள், படங்கள், புதுச்சேரி மண் பொம்மைகள், நாய், பூனை, மாடு முதலிய மேனாட்டுப் பீங்கான் பொம்மைகள் முதலியவைகளை வைத்து மத்தியில் கட்டுவது ரூபமான பதுமைகளையும் நிறுத்தி ஒவ்வொரு சாயங்காலமும் ஒன்பது நாள் வரையில் பாட்டுப்பாடி ஆரத்தி சுற்றி இந்த உற்சவத்தைப் பெண்கள் கொண்டாடுவார்கள். பொம்மைக்கொலுவில் ஆண்கள் கலக்காவிட்டாலும் அவர்களுக்கு ஏற்றபடி வேதபாராயணம், சூரிய நமஸ்காரம், தேவி பூசை முதலியவைகளால் தமது வீடு க்ஷேத்திரம் நிறைந்து மங்களகரமாவதற்குப் பார்ப்பனர்களை ஏற்படுத்துவார்கள். சிலர் நவராத்திரி காலத்தில் ராமாயணம், பாகவதம், கந்தபுராணம் முதலிய புராணங்களையும் படிப்பார்கள். நவராத்திரியின் கடைசி நாளாகிய மகாநவமி தினத்தில் தமது வீட்டிலிருக்கும் புஸ்தகங்கள் எல்லாவற்றையும் ஒழுங்காகக் கொலு வண்டை அடுக்கிவைத்து காலை முதல் உபவாசமிருந்து சரஸ்வதி பூசை செய்வார்கள். இந்த மகாநவமி அன்றைக்காவது அல்லது அடுத்த தினத்திலாவது தொழிலாளிகள் தமக்கு சாதனத்திற்குச் சமமாகவிருக்கும் ஆயுதங்களை வைத்து பூசை செய்வார்கள். ஆனதால் இந்தப் பூசைக்கு ஆயுதபூசை என்றும் ஒரு பெயருண்டு.

இந்த நவராத்திரி ஒன்பது தினங்களுள் முதல் மூன்று நாள் ருத்திரனின் பெண்ஜாதியான துர்க்கையையும், இரண்டாம் மூன்று நாள் விஷ்ணுவின் பெண்ஜாதியான லட்சுமியையும், கடைசி மூன்று நாள் பிரமாவின் பெண்ஜாதியான சரஸ்வதியையும் ஆராதிப்பது சிறந்த முறையென்றும் இவ்வாறு செய்ய சக்தியற்றவர்கள் மகாநவமி யன்றைய தினத்திலாவது துர்க்கைக்குரிய ஆயுதங்கள், லட்சுமிக்குரிய இரத்தினங்கள், சரஸ்வதிக்குரிய ஏடுகள் இவைகளை வைத்தாவது பூசித்தல்வேண்டும். இந் நவராத்திரி காலத்தில் ராமாயண பாகவத கந்தபுராண திவ்விய கதைகளைப் படித்து அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு பார்ப்பனர்களுக்குத் தானம் சமாராதனை முதலியவைகள் நடத்தவேண்டுமென்றும் இம்மாதிரி பெரியோர்களால் நமது நன்மைக்கு ஏற்படுத்தப்பட்ட இந்த உற்சவத்தை அனுஷ்டித்தால் நமக்கு இகலோகபாக்கியங்கள் கிடைத்து சித்த சுத்தியுண்டாகி நாம் முடிவில் பரமபதமடைய யோக்கியர்களாவோம் என்றும் இதற்கு ஆதாரமாக பார்வதி லட்சுமி சரஸ்வதி மூன்றுபேர்களும் தங்கள் காரியசித்திக்குத் தவம் செய்தது இந்த ஒன்பது நாளென்றும் லட்சுமி அலர்மேல் மங்கையாக வந்து இந்த ஒன்பது நாளும் தவமிருந்து திருப்பதி வெங்கடாசலபதியை மணந்து கொண்டதாம். மகிஷாசுரனைக் கொல்லுவதற்குப் பார்வதி ஒன்பது நாள் தவமிருந்து சம்மாரம் முடித்ததும் சுதேதின் மகன் அங்கிரிஸ் இவன் நவராத்திரி பூசை செய்த மகிமையால் சத்துருக்களை ஜெயித்து தகப்பனுக்கு ராஜ்யத்தைத் திருப்பிக்கொடுத்ததுமான புராணக்கதைகளின் ஆதாரத்தோடு சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

இந்த நவராத்திரியை சுவார்த்த வைணவ மாத்வ சைவர்கள் முதல் பலரும் கொண்டாடுகிறார்கள். விஷ்ணு ஆலயங்களிலும், சில ஆலயங்களிலும் இந்த உற்சவம் கொண்டாடப்படுகிறது. இவைகளெல்லாம் இந்த மதங்களுக்கும் இந்த ஜாதிகளுக்கும் பொதுவென நம் சொல்லப்படுகிறது! இதற்குக்காரணம் பிரமாவின் பத்தினியாகவும் கலை வித்தைகளுக்குத் தேவியாயும் இருக்கும் சரஸ்வதி இந்நவராத்திரியில் தன் கணவனை வேண்டித் தவம் செய்ததனால், அது காரணம்பற்றி கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதிக்கு முக்கியமாயிற்று. ஆகவே படிப்பதற்கு உபயோகமாகிய ஏடுகளும், தொழிலாளிகளுக்குப் படிப்பிற்குச் சமமான தொழிலை நடத்த சகாயஞ்செய்யும் கருவிகளும் சரஸ்வதியின் ரூபங்களாகக் கொண்டு மகா நவமியன்று பூசைகள் நடந்து வருகின்றன. இந் நவராத்திரிக்கு சரஸ்வதி சம்பந்தமேற்பட்டதால் இது எல்லா இந்து சமயத்தார்களுக்கும் பொதுவென்றும் சொல்லப்படுகிறது.

கல்வியும் பொருளும் கல்வியின் ரூபமாகவிருக்கும் சரஸ்வதியும் [illegible], சரஸ்வதியின் பூசையும் பொதுவென்று சொல்லிக் கொண்டாலும், [illegible] சரஸ்வதியின் அறிவு ரூபமான இந்து வேதத்தின் முக்கிய அம்சங்களை பார்ப்பனர் ஒழிய மற்றவர்கள் படிக்கக்கூடாதென்று சாஸ்திரப் பள்ளியில் தடுக்கப்பட்டிருக்கின்றது. தேவாரப் பாடசாலைகளிலும் சற்சூத்திரரென்று நினைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்குத்தான் அப்பாடசாலை சொந்தமாம். பொதுப்பணத்திலிருந்து வாழ்ந்துவரும் வேதப் பள்ளிகளில் [illegible] சரஸ்வதியைக்கூட தாழ்த்தப்பட்டவர்களையும், ஒதுக்கப்பட்டவர்களையும் அண்டவிடுவதில்லை. பொதுவாக கல்வியும், அறிவும் வைத்துக்கொண்டிருக்கும் சரஸ்வதிக்கு இந்தக் கொடுமை சம்மதமாகவிருக்குமா? பொதுவாக ஒரு சரஸ்வதியும், அந்த சரஸ்வதி பிரமதேவனின் பெண்ஜாதியாகவும், நமக்கெல்லாம் ஒரு தேவியாகவுமிருப்பது சத்தியமானால் அந்த சரஸ்வதி இல்லாத நாட்டில் கல்வியும், அறிவும் பரவியிருப்பதும் கல்விக்கும், அறிவுக்கும் காரணமாயிருக்கும் சரஸ்வதி பருவதேவியோடு வாழும் நாட்டில் கல்வியும், அறிவும் பரவாமலிருப்பதற்கும் காரணமென்ன?

சரஸ்வதியென்னும் தெய்வமில்லாத நாடுகளனைத்தும் கல்வியும், அறிவும் மனிதனுக்கின்றியமையாத பொதுவென்பதை ஒப்புக்கொண்டு அதன் வழியே நடக்கிறது, சரஸ்வதியென்னும் தெய்வத்தை வைத்து நவராத்திரி உற்சவம் செய்யும் நமது நாடு கல்வியும் அறிவும் அடைந்

ஜாதிக்காரர்களுக்குத்தான் சொந்தமென்று சொல்லி மற்றவர்கள் அதில் பிரவேசிக்க மார்க்கமில்லாமல் தடுத்துக் கொடுமை செய்கிறது. அவ்விதம் நமது நாட்டுக் கல்வியாளர்களும், உயர்ந்த ஜாதிக்காரர்களும் செய்துவந்த கொடுமையால் நமது நாடு அடைந்துவந்த நன்மை என்னவென்பதை சற்று ஆலோசித்துப் பாருங்கள். சரஸ்வதியைக் கொலுவிருத்தி பெரிய உற்சவங்கள் செய்யும் நமது நாட்டில் ஆயிரத்துக்கு 50 பேருக்குக்கூட கல்வியில்லை. சரஸ்வதியே இல்லாத நாட்டில் ஆயிரத்திற்கு 996 பெயர்கள் கல்வி கற்றவர்களாக விருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன? ஆயிரம் பேருள் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் மற்றெல்லா தேசங்களில் கல்வி கற்றவர்களாய் விளங்குகின்றார்கள் என்கிற குறிப்புகளை சிங்கப்பூர் முன்னேற்றம் என்னும் பத்திரிகை எடுத்துக் காட்டியிருப்பதைக் கீழே குறிப்பிடுகிறேன்.

| | ஆண் | பெண் |
|---|---|---|
| பிரிட்டானியா | 932 | 912 |
| அமெரிக்கா | 955 | 930 |
| பிரான்ஸ் | 965 | 940 |
| ஜெர்மனி | 998 | 980 |
| டென்மார்க்கு | 996 | 995 |
| ஜப்பான் | 985 | 966 |
| இந்தியா | 50 | 12 |

நமது நாட்டில் ஆணும், பெண்ணும் சேர்ந்து கல்வி கற்றவர்கள் ஆயிரத்திற்கு 62 பேர்களே யிருக்கிறார்கள். இதில் குமாஸ்தா வேலைக்குப் போகும் கல்வியும், வியாஜ்யங்களை உற்பத்தி செய்யும் வக்கீல் கல்வியும், சமயத்தின் பேரால் மூட நம்பிக்கைகளை உண்டு பண்ணும் கல்வியும், தங்கள் உயர்விற்கும் ஜீவனத்திற்கும் கடவுள் பெயரைச் சொல்லி சமூகங்களை ஏமாற்றும் கல்வியும், உயர்ந்த ஜாதியென்னும் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள மற்ற சமூகங்கள் அடிமையென்றும், பஞ்சமர் என்றும் பாட்டுப்பாடும் கல்வியும் தவிர வாழ் அறிவிற்கும் பொதுஜன உபயோகத்திற்கும் உள்ள கல்வியைக் கற்றவர்கள் அதிலும் சொற்பம் தானே.

சரஸ்வதி, பார்வதி, லட்சுமி, துர்க்கை முதலிய எல்லாப் பெண் தெய்வங்களையும் கொலுவமர்த்தி கும்பிட்டு நின்ற நமது உயிரும், அழகும்கொண்ட செழித்த நாட்டை அதன்மேல் இடைவிடாமல் சண்டைக்கு வந்த பாலைவன மணல்காடு அழித்துவிட்டதற்குக் காரணமென்ன? அப்பொழுது நமது நாட்டில் சுயராஜ்யமில்லாமலா? மனுஷியப் பொதுநல உத்தம லட்சியங்களைப் பரவவிடாமல் வேஷம் காட்டின கொடுமையினாலா? ஜாதியின் திறமையை வளர்ப்பதாகிய கல்நெஞ்ச சம்பிரதாயம் மேலோங்கி ஜனத்தின் ஜீவசக்தியைச் சப்பிவிட்டதினாலேயா? என்பதையும் ஆலோசித்துப் பாருங்கள் உழுவோனுக்குக் கல்வி கற்றால் அவனுக்குவரும் ஊதியத்தை அபகரித்துக்கொள்ள முடியாதென்றும் பெண்ணிற்குக் கல்விகற்பித்தால் அவளுடைய பதியும் சகுனமான கணவனுக்கு ஒரே ஆராதனை நடத்தி அடிமையாக விருக்கமாட்டாளென்றும் மற்றெல்லா சமூகங்களும் கல்வி கற்றால் தங்கள் உயர்வும், பிழைப்பும் போய்விடுமென்றும் எண்ணி, கல்வியைத் தடுத்து சமூகங்கள் ஒன்றுக்கொன்று முன்னேறாமல் செய்துவைத்திருப்பதினாலா என்பதையும் ஆலோசித்துப் பாருங்கள்? இந்தப் பூஜையில் வேதபாராயணம் சுந்தரகாண்ட பாராயணம் சூரிய நமஸ்காரம் முதலியவைகளுக்குப் பார்ப்பனர்களுக்கு பூரி, தட்சணை கொடுப்பதுமல்லாமல் பார்ப்பனப் பெண்களுக்கு ஆடை ஆபரணங்களும் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அம்மனுக்குத் திருப்தியுண்டாகுமாம்.

நமது விதிக்கு கர்த்தரான தெய்வங்களுக்குப் பார்ப்பான் இரத்தபந்து வென்றும் அவன் கை தெய்வங்களின் கையுடன் கோர்க்கப்பட்டிருக்கிறதென்றும் அவனிதழ்கள் தெய்வங்களுடைய செவிப்புறத்தே இருக்கின்றன வென்றும் தெய்வங்களின் மந்திரசபைகளிலும் அந்தரங்க அறைக்குள்ளும் பார்ப்பான் போக அனுமதியுண்டென்றும் அதை தடுத்தினால் விஜயன் ஜெயன் என்பவர்கள் ராவணாதி ராட்சதர்களாய் பிறந்தார்களென்றும் இதையெல்லாம் தெய்வங்களே சாஸ்திரத்தில் சொன்னதாகவும் நமது நாட்டு சனங்களுக்கு உபதேசமாயிருக்கிறது. பார்ப்பானைத் திருப்திபண்ணவிட்டால் தெய்வங்கள் எந்தக் கர்மத்தையும் ஏற்றுக் கொள்ளாதென்பதும் உபதேசமாயிருக்கிறது. அந்த நமது தெய்வங்களின் பெண்ஜாதிகளான பெண் தெய்வங்களும் பார்ப்பனப் பெண்களைத் திருப்தி பண்ணாவிட்டால் நவராத்திரி பூஜையை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொல்லுவதற்குப்பாத்தியதை இல்லாமல் போகவில்லையே. மதுரை ஜில்லாவிலுள்ள ஒரு ஜமீன்தார் வீட்டில் போன வருடம் நவராத்திரி பூஜையை சங்கராச்சாரி நடத்திவைத்தார். சரஸ்வதியின் பூஜையின் மகத்துவத்தையும் பார்ப்பானுக்கும், பார்ப்பனப் பெண்களுக்கும் தானங்களின் புண்ணிய விசேடங்களையும் ஜெமீன்தாருக்கும், அங்கிருந்தவர்களுக்கும் எடுத்துச் சொல்ல தேவி பாகவதத்தைப் பிரமாணமாகக் காட்டினாராம். தெலுங்கு தேசத்துப் பார்ப்பானால் செய்யப்பட்டு உபபுராணம் பதினெட்டில் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட தேவி பாகவதமென்னும் வைணவ புராணத்திற்கும் சங்கரர் மதமான அத்வைத மதத்திற்கும் பார்ப்பான் பிழைக்கும் வழியை உண்டுபண்ணும் சம்பந்தமல்லாது வேறு எதாவது சம்பந்தமுண்டா என்பதையும் ஆலோசித்துப் பாருங்கள். சரஸ்வதியின் புருடனான பிரமாவின் முகத்திலிருந்து பார்ப்பார்கள் உண்டானார்கள் பார்ப்பனப் பெண்களும் பிரமாவின் முகத்திலிருந்தோ, சரஸ்வதியின் முகத்திலிருந்தோ பிறந்தார்கள் என்று சாஸ்திரங்களில்லை. பார்ப்பான் பிறந்த முகத்திலிருந்தே பாப்பாத்தியும் பிறந்திருந்தால் தமயன் தங்கை முறையாயிற்றே. சிறிது தள்ளிப் பிறந்திருந்தால் ஜாதி கீழ், மேல் ஆகிவிடுமே. இவ்வித சங்கை யாருக்குமுதிக்கும்! உதித்தாலோ அவர்கள் நாஸ்திகர்கள் சாஸ்திரத்தின் மட்டம் தெரியாதவர்களென்று தூற்றுவார்கள். பார்ப்பனர் சொல்லுவதையே கேட்டு அவர்களுக்கே தானமும் கொடுத்துக்கொண்டிருந்தால் பிராமண விஸ்வாசம் தெய்வ பக்தி சாஸ்திர நம்பிக்கை உடையவனென்று புகழ்வார்கள். இதற்காகவே இன்னும் பலர் பணத்தைப் பாழாக்கிறைக்கிறார்கள்.

இனி துர்க்கையைப் பற்றிக் கவனிப்போம். துர்க்கை உருத்திரனின் பெண்ஜாதி. துர்க்கைக்கு நவராத்திரியில் மூன்றுநாள் சொந்தம். ஆயுதங்களுக்குத் தேவதை. இந்தக் கதைகளைச் சொல்ல இங்கு இடமில்லை. இந்தத் துர்க்கையின் பூஜையில் புரோகிதனுடைய சட்டதிட்டங்கள் குறுக்கிட்டதினாலேயே இந்தியா வீழ்ச்சி அடைந்து பலர் கொள்ளையடிக்க காவலில்லாத பண்டகசாலையாயிற்று. தஞ்சாவூரில் நாயக்கர் அரசாட்சி அழிந்ததற்கு நவராத்திரி பூஜையே காரணம். வருடா வருடம் நவராத்திரி பூஜை செய்து அதற்குதவியாக சங்கராச்சாரியும், தன்னுடைய சாதாரம்பரையும் கொடுத்துக் கூட விருந்து ஆசீர்வாதம் பண்ணி மந்திரோபதேசம் செய்து நடந்துவரும் மைசூர் பார்வோட்டை ஒரு சிப்பாயான ஐதராலிக்கு அடங்கி அடிமையாய் போனதற்குக் காரணமென்ன? துர்க்கையை நினைக்காத வெள்ளைக்கார ஆயுதபூஜை ஐதரைத் தோற்கடிப்பானேன்? மலையாளமெல்லாம் துர்க்கை என்னும் பகவதிதான் நிறைந்துகிடக்கிறது. நவராத்திரி உற்சவத்திற்கு (எல்லாப் பார்ப்பனக் குடும்பங்களுக்கும் எல்லாக்கோயில்களிலும் சோறுண்டு. எல்லா அம்மன்களும் கொலுவிருக்கும். இந்த மலையாளத்து துர்க்கைகளையெல்லாம் அடித்து அதன் கோவிலை இடித்து ஓட்டி அதற்குப் பூசை செய்யும் புரோகிதர்களையும், அதைக் கண்டு களிக்கும் ராஜாக்களையும் ஓடச்செய்து மலையாளத்திற்கு எல்லைதேவதையும் அதிக உக்கிரமுடையதென்று பார்ப்பனர்கள் சொல்லும் தேவதையுமான கடுமன்ன பகவதியின் கோவிலையிடித்து பாலக்காட்டில் அதன்

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வாருங்கள்! வாருங்கள்!!

# திருச்சிக்கு வாருங்கள்!

செப்டம்பர் 29, 30 தேதிகளில், திருச்சி புத்தூர் மைதானத்தில்
நடைபெறப்போகும்

17-வது மாகாண திராவிடர்கழக—4-வது மாகாண சுயமரியாதை

# மாநாடுகளில்

## வந்து பங்கு கொள்ளுங்கள்.

★

திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) மாநாட்டிற்கு

## தலைவர்: ஈ. வெ. ராமசாமி

திறப்பாளர்: என். அர்ச்சுனன், கொடிஉயர்த்துவோர்: இந்திராணி பாலசுப்ரமணியம், வரவேற்புத் தலைவர்: டி. பி. வேதாசலம்.

சுயமரியாதை மாநாட்டிற்கு

## தலைவர்: டி. சண்முகம்

திறப்பாளர்: கே. கே. நீலமேகம், கொடியேற்றுபவர்: கனகம் மையார்ராமசாமி, வரவேற்புத்தலைவர்: சி.என். அண்ணாதுரை.

50-ஆயிரம் மக்கள் குழுமியிருக்க ஒலிபெருக்கி, மின்சார விளக்குகள் கூடிய அலங்காரப் பந்தல், 'பெரியார் தொண்டர் படை' அணிவகுப்புக் கொண்ட மாபெரும் ஊர்வலம்.

வெளியூர் பிரதிநிதிகட்கு உணவு வசதிகள், உணவு விடுதிகள் மூலம் ஏற்பாடாகி விட்டன. மாநாடுகளில் பதினாயிரக்கணக்கான பெண்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். பெண்கட்குத் தனியிடமுண்டு.

இரண்டு நாட்கட்கும் பிரதிநிதிகட்டணம் ரூ. 1. பார்வையாளர்கட்டணம் அணா 8.

## இவ்வார நிகழ்ச்சிகள்

பொன்மலையில் இயற்கை எய்திய தோழர் வ. துரைசாமி பிள்ளையின் இறுதிச் சடங்குகள் 16-9-45 காலை 9 மணிக்கு திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில் நடைபெறும். தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்களால் பெரியாரின் படத் திறப்பு விழாவாற்றப்படும். தோழர்கள் டி. பி. வேதாசலம், ஈ. வெ. கி. சம்பத், ஏ. பி. ஜனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

o o

மணக்காலில் 16-9-45 காலையில் தோழர்கள் ராசப்பிள்ளை—மங்கையர்க்கரசி மான் திருமணம் தோழர் இ. கடேச முதலியார் தலைமையில் நடைபெறும்.

o o

பொன்மலை திராவிட மாணவர் கழகச் சார்பில் 16-9-45 மாலை 7 மணிக்கு திராவிட வாலிபர் கழக தோட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில் தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, ஈ. வெ. கி. சம்பத், ஏ. பி. ஜனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

o o

மதுரை, வடக்குமாசி வீதியில் நகராடிகல்டிமாக்ராடிக் கட்சியின் அமைப்புக்கூட்டம் 16-9-45 மாலை 3 மணிக்கு நடைபெறும்.

o o

சென்னை சுயமரியாதைச் சங்கம். திராவிடர்கழகம் ஆகியவற்றின் நிர்வாகக்கமிட்டிக்கூட்டங்கள் முறையே 17-9-45 மாலை 6-30, 7-30 மணிக்கு பார்க்டவுன், கோவிந்தப்ப ஆச்சாரி தெரு, 6வது நம்பர் மாடியில் நடைபெறும். மாகாண மாநாட்டுப் பிரதிநிதிகள் தேர்தல், டிக்கட் விற்பனை நடைபெறும்.

o o

காரைக்குடி திராவிடர் கழகச் சார்பில் 17-9-45 அன்று பெரியார் 67-வது பிறந்ததின விழா நடைபெறும். தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) முதலியோர் அழைக்கப்பட்டுளர்.

o o

பொன்மலை திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில் மேற்படி கழகத்திற்கு 1945–46-ம் ஆண்டு நிர்வாகிகள் தேர்தல் 18-9-45 மாலை 7-30 மணிக்கு நடைபெறும். அங்கத்தினர் யாவரும் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

o o

(வ. ஆ.) திருப்பத்தூர், சாமி செட்டித் தெரு, 37 நெ. இல்லத்தில் வட ஆற்காடு ஜில்லா திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 23-9-45 மாலை 4 மணிக்கு நடைபெறும். மாகாண மாநாடுகளுக்கு தலைவர், பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாகவும், பல வகுப்பு விஷயமும் யோசிக்கப்படும்.

• •

சென்னை, தண்டையார்பேட்டை திராவிடர் கழகச் சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா தோழர் டி. சண்முகம் தலைமையில் 16-9-45 மாலை 6-30 மணிக்கு நடைபெறும். தோழர்கள் என். ஜீவரத்னம், எஸ். ஆர். சாண்டோ, கே. அன்பழகன், சி. செல்வத் தாண்டன், பி. கணேசன், ஜெயச்சந்திரன், என். வி. நடராஜன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

o o

வேலூர் முனிசிபல் சித்தவைத்தியசாலை டாக்டரும், தன்னுணர்வுத் தோழருமான டாக்டர் வே. முருகேசன் தமையனார் புதல்வருமான தோழர் வே. கி. ஜெகதீஸ்வர முதலியார் 4-9-45 அன்று இயற்கை எய்தியதை முன்னிட்டு 19-9-45 மாலை 5 மணிக்கு பெரியார் இல்லத்தில் மறைந்த தோழருக்கு இறுதி வருத்தநாள் கொண்டாடப்படும். இதன் நினைவாகக் "குடி அரசு"க்கு ரூ. 5 நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## சீர்திருத்த மணம்

வடசேரி சாலிய சமூகத் தோழர் என். லெட்சுமணப் பெருமாளுக்கும் தோழர் காசம்மையாருக்கும் 9-9-45 ஞாயிற்றுக்கிழமை வக்கீல் தோழர் பி. சிதம்பரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் கோட்டாறு தோழர்கள் டாக்டர் எஸ். பூதலிங்கம் (சுயமரியாதை வாசிப்புச் சாலை செயலாளர்), வடசேரி எஸ். மாணிக்கம் அவர்கள் சொற்பொழிவாற்ற, எஸ். தில்லைநாயகம் வாழ்த்த, என். சிதம்பரம் நன்றி கூற சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. இதுவே இச்சமூகத்தில் முதல் சுயமரியாதைத் திருமணம். இத் திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு" பத்திரிகைக்கு ரூ 5 நன்கொடை அளிக்கப்பட்டது.

## உறக்கமா மாணவரே?

ஆங்காங்குள்ள மாணவர் கழகங்கள், நிர்வாகிகள், உறுப்பினர் எண்ணிக்கை ஆகியவற்றை உடனே அடியிற்கண்ட முகவரிக்கு எழுதுமாறு சென்ற வாரமே கேட்டிருந்தும் வேலூர் (சேலம்), பொன்மலை ஆகிய இரு இடங்களிலிருந்துதான் கடிதங்கள் வந்தன. மற்ற மாணவத் தோழர் உறங்குகின்றனரா?

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

## அறிக்கைகள்

திருச்சி மாநாடுகளுக்கு சேலம் ஜில்லாவிற்கு ஏற்றுக்கொண்ட கோட்டாப்படிக்குக் கொடுக்கவேண்டிய ரூபாய்களுக்கு நமது பல தாலூகாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து நன்கொடை வசூலித்து அனுப்ப உத்தேசித்திருந்தேன். ஆனால் எனக்கு உடல்நலமில்லாததினால் தாலூகாக்கள்தோறும் வர இயலவில்லை. ஆதலால் ஒவ்வொரு திராவிடர், சுயமரியாதைக் கழகத் தலைவர்களும், அன்பர்களும் தங்களாலியன்ற நன்கொடையை பெரியார் அவர்களுக்கு விரைவில் அனுப்பிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜி. பி. சோமசுந்தரம்,
திராவிடர் கழகத் தலைவர்,
சேலம்.

• •

20-9-45 வியாழனன்று திராவிடர் சுயமரியாதை மாநாடுகள் கமிட்டிக் கூட்டம் முடிவுற்றவுடன், டவுன் ஹாலில், 29-9-45 இரவு $10\frac{1}{2}$-க்கு மேல் நடக்கப்போகும் சு. ம. இளைஞர் மாநாட்டிற்குத் தலைவர், திறப்பாளர்கள் இவைகளைப் பற்றி முடிவு செய்ய ஒரு கமிட்டி கூடும். அன்று இளைஞர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

ராம. சுப்பையா, டி. கே. சீனிவாசன், பெ. வீ. சுந்தரம், எஸ். பிரான்சிஸ், கு. பராங்குசம்.

## எழுத்தாளருக்கு

நமது "குடி அரசு" பத்திரிகையில் வெளியிடுவதற்காகப் பல தோழர்கள் அருமையான கவிதைகளும், கட்டுரைகளும் ஏராளமாக எழுதியனுப்புகிறார்கள். அவைகளைப் பிரசுரிப்பதற்குப் போதிய இடமின்மையால் பொறுத்தருள வேண்டுகிறோம்.

# திருச்சி மாநாடுகள்

## கணவன் மனைவி உரையாடல்

("அணுக்குண்டு")

கணவன்:- (மனைவியைக் கூப்பிடுகிறார்) என்னா! எம்பேசலே!! வுன்னைத்தான்!!! காது கேக்கலே.

மனைவி:- ஓய் என்னையா? இதா வந்துட்டேன்.

க:- வாவா, சீக்கிரம் வா!

ம:- இதா வந்துட்டேன், வந்துட்டேன். என்ன அப்படி அவசரமுங்கோ?

க:- ஒண்ணும் இல்லே, தபால் வந்தது ஒடச்சிப்பாத்தேன். அதுலே திருச்சியிலே மகாநாடு நடக்குதாமா, அழைப்பு வந்திருக்குது.

ம:- அதுக்கென்ன? என்னை ஏன் கூப்பிட்டீங்கோ?

க:- உன்னைக்கூப்புட்டது எதுக்குண்ணு கேக்குரையா? அதுலே உன்னையுங் கூட்டிக்கிட்டு வரச் சொல்லி எழுதி இருக்குது.

ம:- சரி சரி, உங்களுக்கு இது தான் வேலை. வேறே காரியம் ஒண்ணும் இல்லையாக்கும். வேணு முன்னா நீங்க போங்க, நானு வல்லே.

க:- ஏன் அப்படிச் சொல்லறே? வா போயிட்டு வரலாம், ரெம்பபேரு வருவாங்கோ: பெரியாரு, அண்ணாத்துரை, அழகிரிசாமி, நெடுஞ்செழியன், அன்பழகன், ஜனார்தனம், சம்பத்து இன்னம் யார் யாரோ வருவாங்கோ நல்லா பேசுவாங்கோ சவுக்கியமா கேட்டுவரலாம், வா.

ம:- இவுங்கல்லாம் என்னத்தைப் பேசுவாங்க? சாமிங்கோ இல்லே, பூதம் இல்லெ, பிசாசு இல்லெ, கோயிலுக்கும் போயி இடிபடாதே, செலவு செய்யாதே, கலியாணம் கருமாதிக்குப் பாப்பானைக் கூப்பிடாதே, அய்யனுக்குத் தெவசம் கொடுக்காதே, தாலி கட்டிக்காதே, இதுதானே? இப்படித்தாங் பேசுவாங்கோண்ணு வாத்தியாரம்மா சொன்னா, இந்த அவியானத்தைப் போய் கேட்டுக்கிட்டு வரணுமாக்கும், இதுக்கு 10 ரூ. செலவாக்கும். நானு வல்லே.

க:- சும்மா அப்படிச் சொன்னா போதுமா? அவுங்க ஏன் அப்படிச் சொல்றாங்க இன்னு தெரியவாண்டாமா? வா போயிட்டு வரலாம்.

ம:- நானு வல்லேங்கா அங்கே ஆம்பிளைங்கோ கொறையா இரும்பாங்கோ. ஐயோ எனக்கு இங்கயே ஒடம்பு கூசுது. அத்தனை ஆம்பளைங்களுக்குள்ளே எப்படித்தான் போயி உக்கார்ரது?

க:- அட பைத்தியமே நீ மாத்திரமா வர்ரே, இன்னும் ஆயிரக்கணக்கான பொம்பளைங்கோ வர்ராங்க, வா போயிட்டு வரலாம்.

ம:- ஐயோ நாமாட்டேஞ்சாமி! அந்த ஆம்பளைங்க கூட்டத்திலெ நான் வந்து இருக்கமாட்டேன்.

க:- இதுதா பொம்பளே புத்தி என்கிறது. நீ சந்தைக்கி போறையா இல்லையா? கடைவீதிக்கி போறையா இல்லையா? கோயில்களுக்கு தேர்திருனாளுக்கு போறையா இல்லையா? அங்கெல்லாம் ஆம்பளை வர்றது இல்லையா? நீ ஆம்பளையெ கண்ணாலே கண்டதே இல்லையா? திருவிழாவுக்குப் போறையே நானு வல்லேன்னாக் கூட பக்கத்துவுட்டுக்காரிபோட சேர்ந்துக்கிட்டு போய் 2 நாளு, 3 நாளு சுத்திப்போட்டு வர்றையே, அங்கே கூட்டத்திலே, நெருக்கத்திலே சிக்கி நசுக்கப்பட்டறையே அதைவிடவா மாநாட்லெ ஆம்பிளைங்க இருப்பாங்கோ, அதுமாதிரியா நெருக்கத்திலே நசுக்கப்படுவெ? சினிமா மாதிரி மாநாட்டிலே கண்ணே பொண்ணேன்னு கொஞ்சுவாங்களா? கெட்ட பேச்சு பேசுவாங்களா? என்னமோ பேசறையே.

ம:- சரிப்பா நீங்க மகாநாட்டுக்குப் போயி கேட்டும்போயிட்டீங்க. இதெல்லாம் அங்கெ பேசற பேச்சுதான் எனக்குத் தெரியும். போயிட்டு வந்ததுக்கு அப்புறம் கோயிலுக்குப் போகவேண்டாம் எம்பீங்கோ, நானு வல்லெ.

க:- அப்படிச் சொல்லாதே, நீ வா-வந்து கேளு-அப்புறம் உன் இஷ்டப்படி நட, நானு வாண்டாண்ணு சொல்லல்லே—நானு தனியா போறத்துக்கு எனக்கு வெக்கமா இருக்குது. வீட்டுலெ பொம்பளை இல்லாட்டாலும் பரவா இல்லெ, அல்லது நீயாவது தெரிஞ்ச பொம்பளையா யிருந்தாலும் பரவா இல்லை. மனைய காலத்துப் பொம்பளையாட்டமா உன்னை வூட்லெ வெச்சிக்கிட்டு நானுமாத்திரம் போயிட்டு வந்தா என்ன பிரயோசனம். நானு ஒண்ணு சொல்ல நீ ஒண்ணு பண்ண கலகந்தானே வூட்லெ. முடியாது நீ வந்துதா ஆகணும்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)


மே. த. கவர்னரின்

யுத்த நிதி

பிரிட்டிஷ் ஜனநாயக நாடுகள்

(காமன் வெல்த்)

வெற்றியடைய உதவியதற்காக

பெருமையடைகிறது.

★

ஆனால்

துருப்புகளின் சௌகரியங்களுக்கு

இன்னும் பொருளுதவி மிக மிகத் தேவையாகிறது.

குடி அரசு

1945-௵ செப்டம்பர் 15-௳

# ஜஸ்டிஸ் சுயமரியாதை இயக்கங்கள்

ஜஸ்டிஸ் கட்சி என்னும் திராவிடர் கழகம் தோன்றி இன்று 28 ஆண்டு ஆகிறது என்று சொல்லலாம். இக்கட்சி தென் நாட்டில் உள்ள திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கு ஆகவே தோற்றுவிக்கப்பட்டதாகும்.

இக் கட்சி தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் இக் கட்சிக்கு ஒரு பொருத்தமான பெயர் வைப்பதற்கு கட்சிப் பிரமுகர்கள் மிக்க கவலைப்பட்டு பலவித அபிப்பிராயபேதம் காரணமாகத் தென்னிந்தியர் கட்சி என்று பேர் வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் அதற்கு செல்வாக்கான பெயராக "பார்ப்பனரல்லாதார்" கட்சி என்றே சொல்லப்பட்டு அது பெரிதும் பழக்கத்திலும் வந்துவிட்டது. காலப்போக்கில் அக்கட்சி நாளுக்குநாள் தேய்மானமடைந்து கட்சிப் பிரமுகர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் ஒருவருக்கொருவர் பொறாமையும் விரோதபாவமும் கொண்டு பாமர மக்களிடம் செல்வாக்கற்றுப்போனது மாத்திரமல்லாமல் படித்த மக்கள், செல்வவான்கள், கட்சியின் பேரால் பட்டம், பதவி, பணம், பெருமை சம்பாதித்து அனுபவித்துப் பெரியவர்களானவர்களும் கட்சியைக் குற்றம்குறை கூறிக்கொண்டு கட்சியை விட்டு நழுவிக்கொண்டே போக நேரிட்டதுடன் பலனனுபவித்தவர்களில் பெரும்பான்மையோரும் முக்கியஸ்தர்களும் கட்சியினால் தாங்கள் பெரியவர்கள் ஆகவில்லை என்றும், கட்சி தங்களுக்கு ஏதும் செய்யவில்லை என்றும், சிறிது ஏறக்குறைய யாவருமே சொல்லிக்கொள்ளவும் துணிந்துவிட்டார்கள். இதன் இடையில் இக்கட்சிக்கு எதிரிகளான பார்ப்பனர்கள் இக்கட்சியின் இப்படிப்பட்ட நிலைமையை அறிந்து கட்சிக்கு செய்யவேண்டிய கேடுகளெல்லாம் செய்ததோடு இக்கட்சியில் உள்ள பல பிரமுகர்களை இக்கட்சியின் எதிர் ஸ்தாபனமான காங்கரசுக்கு இழுத்து அவர்களில் பலருக்கு ஸ்திரமான பதவியும் சிலர் எப்போதும் தங்கள் அடிமையாகவே இருக்கத்தக்க நிலைமையையும் ஏற்படுத்திக்கொண்டு ஜஸ்டிஸ்கட்சி ஒழிந்தது என்ற நிலையை உண்டாக்கிவிட்டார்கள். இதுதான் 1917ம் வருஷம் முதல் 1937ம் வருஷம் வரை ஜஸ்டிஸ்கட்சி சரித்திரத்தின் சுருக்கமாகும்.

இதன் இடையில் 1925ம் ஆண்டு வரை காங்கரசில் இருந்து உழைத்து வந்து, அதாவது எலக்ஷன், அரசியல் ஆகிய காரியங்களைப்பற்றிக் கவலையில்லாமல் சமுதாய சீர்திருத்தம் ஒன்றையே கண்ணாகக் கொண்டு காங்கரசில்சேர்ந்து தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, மதஒற்றுமை (இந்து முஸ்லிம் ஒற்றுமை) முதலிய காரியத்துக்கே உழைத்து அதாவது, கள்ளுக்கடை மறியல், வெளிநாட்டுத் துணி பகிஷ்காரம் (கதர்), தீண்டாமை, சத்தியாக்கிரகம், (வைக்கம், சுசீந்திரம், சத்தியாக்கிரகம்), முதலிய காரியங்களிலேயே முக்கியமாய் ஈடுபட்டு வேலை செய்து அதற்கு ஆகப் பல முறை சிறையும் சென்றுகொண்டிருந்த தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் பரிதாபகரமான நிலைமையையும் காங்கரசில் பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்கு செய்துவரும் சூழ்ச்சிகளையும் கண்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்னும் காரணத்தால் காங்கரசிலிருந்து வெளிவந்து ஜஸ்டிஸ் கட்சியில் சேராமலே சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்றைத் துவக்கி அதற்குப் பத்திரிகை, பிரசாரம் முதலியவைகளைத் தன் சொந்தத்திலேயே ஏற்படுத்திப் பார்ப்பன சூழ்ச்சியை வெளிப்படுத்தி பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆதாரமாய் இருக்கும் ஜாதி, மதம், கடவுள்கள், சாஸ்திர புராண இதிகாசங்கள் ஆகியவைகளை பலமாகத் தாக்கிக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சிக்கும் மதிப்பு ஏற்படும்படி செய்துகொண்டு இருந்தார். இதற்கு காளாவட்டத்தில் காங்கரசில் இருந்த சில பார்ப்பனரல்லாதார் ஒத்துழைப்பும் ஜஸ்டிஸ் கட்சி கூட்டுறவும் சேர்ந்ததால் "சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சிக்கு மறைமுகமாய் உதவி செய்யும் ஒரு தேசத்துரோக இயக்கம்" என்கின்ற பெயரை பாமர மக்களிடம் பெறவேண்டியதாகி அதன் வளர்ச்சி சிறிது தடைப்படநேர்ந்தது என்றாலும், ஜஸ்டிஸ் கட்சியை சாகவிடக்கூடாது என்ற எண்ணத்தின்பேரில் தோழர் ஈ. வெ. ராமசாமி, தனது கூட்டு வேலைக்காரர் மறுத்தும் அவர்களை அலட்சியம் செய்து "ஜஸ்டிஸ் கட்சி ஒழியும்படி விடக்கூடாது" என்று கருதி ஜஸ்டிஸ் கட்சிக்குத் தொண்டாற்றவும் துணிந்து அதிலும் சேர்ந்து இரண்டு கட்சிப் பிரசாரத்தையும் ஒன்றாகச் செய்துவந்தார். என்னசெய்தும் ஜஸ்டிஸ்கட்சிக்கு சுயநலமும் பொறாமையும் அற்ற தலைவர் குறைந்து கொண்டு வந்ததாலும், கட்சிக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் அழுத்த ஒருவருக்கொருவர் முயற்சித்து வந்ததாலும் இனி அக்கட்சி பிழைக்க முடியாத நிலைமைக்கு வந்துவிட்டது என்று கருதி அதையும் அக்கட்சியையும் தாங்கி கைப்பற்றிக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை என்று ஏற்பட்டு அதையும் சுயமரியாதை இயக்கத்திட்டத்தில் ஒன்றாக வைத்து ஜஸ்டிஸ்கட்சியை ஏற்று "அது சாகவில்லை" என்ற அளவுக்காவது இருக்கும்படி பாடுபடவேண்டியதாயிற்று.

இந்தப்படி பாடுபட்டதன் பயனாய் இரண்டு கட்சியும் பாமர மக்களிடத்தில் ஓட்டுப்பெற்று தேர்தலில் வெற்றிபெறும்படியான தன்மை அடையாவிட்டாலும் தமிழ்நாட்டைப் பொருத்த வரை மற்ற எந்தக் கட்சிக்கும் இளைத்ததல்லாத பிரசாரத்தையும், பிரசாரகர்களையும், பொதுக்கூட்ட மதிப்பையும் பெற்று இருக்கிறதுடன் 35,000 அங்கத்தினர்களைக் கொண்டதாகவும், 250 கிளை ஸ்தாபனங்களைக் கொண்டதாகவும், இன்று இருந்து வருகிறது. இந்த நிலையில் கட்சியிலிருந்து சமயத்தில் ஒதுங்கி நின்றவர்கள் உள்ளே வந்து நுழையவும், வயிற்றுப்பிழைப்புக் கட்சி ஆளர்கள் சுயநலத்துக்குக் கட்சியின் மூலம் வகைதேட முயலவு

ரோஜா முத்தையா

மான காரியங்கள் நடப்பது ஒரு அதிசயமான காரியமாக ஆகிவிட்டது. என்றாலும் அப்படிப்பட்டவர்கள் கட்சிகளின் பெருமையும் வாழ்வும் குறையாமல் தங்கள் நலம் நாடுவார்களேயானால் மக்கள் இவர்களது பழையபடத்தையை மறந்து கட்சிக்கு வரவேற்பார்கள் அல்லது வரவேற்கச் செய்யலாம். அப்படிக்கில்லாவிட்டால் வெறுப்பும் கசப்பும் ஏற்படுவது இயற்கையேயாகும். இன்று பிந்திய நிலை தான் விட்டுவிட்டு ஓடிப்போனவர்களுக்கும் எடுத்து வளர்த்தவர்களுக்கும் இருந்துவருகிறது.

இதனால் எடுத்து வளர்த்தவர்களுக்கு எவ்வித குறைபாடும் ஏமாற்றமும் ஏற்படப்போவதில்லை. இவர்கள் பெரிதும் வளர்க்கிற வேலையில் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர தங்கள் நேரம், உழைப்பு, முதல் ஆகியவைகளை செலவிடத் துணிந்து வளர்க்கிறார்களே தவிர வேறு யாரிடத்திலும் எதையும் எதிர்பார்த்து நிற்கவில்லை. ஆதலால் அவர்களுக்கு தாங்களாக தொண்டாற்ற வேண்டியதைத் தவிர, தாங்களாக கஷ்டநஷ்டங்களை ஏற்றுக்கொள்ளக் காத்திருப்பதைத் தவிர யாரிடத்திலும் எதையும் எதிர்பார்த்து ஏமாறவேண்டிய நிலையில் இல்லை. அந்த ஒரு தன்மை தான் பாடுபடுகிறவர்களுக்கும், கஷ்டநஷ்டமடையத் தயாராயிருப்பவர்களுக்கும் அல்லாமல் மற்றவர்களுக்கு கட்சிகளில் இடம் கூட இல்லாமல் கூடுமானவரை ஜாக்கிரதையாய் இருந்துவருகிறது.

ஏமாற்றமடையவேண்டியவர்கள் வேறு கூட்டத்தாரேயாகும். அவர்கள் பெரிதும் மற்றவர்கள் உழைப்பில் தங்களுக்கு ஏதாவது பயன் ஏற்படாதா எப்படியாவது நடந்து பயன் பெறலாமா என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களேயாகும். அப்படிப்பட்டவர்கள் ஏமாறுவதில் அதிசயமில்லை.

எனவே இந்த நிலைமைதான் இன்று கட்சிகளில் பிளவு, கட்சிகளில் அபிப்பிராய பேதம் என்று சொல்லப்படுவனவே தவிர வேறில்லை.

மற்றபடி உழைப்பாளிகளுக்குள் கட்சியில் வேற்றுமையோ அபிப்பிராயபேதமோ இல்லை என்றே சொல்லுவோம். அதைப் பற்றி யாராவது கவலைப்பட்டாலும் அவர்கள் விஷயத்தைக் கூர்ந்து பார்க்காதவர்களேயாவார்கள்.

இன்று பொதுவில் சில தோழர்கள் "ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள பிளவைச் சரிப்படுத்தமுடியாதா" என்று கவலைப்படுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியில் பிளவு இல்லை. கட்சிக்கு உழைப்பவர்களுக்கும், கட்சியின் பேரால் பயன் அனுபவிப்பவர்களுக்கும் உள்ள தகராறுதான் வேற்றுமையாகக் காணப்படுகின்றதே தவிர வேறில்லை. அந்த வேற்றுமையும்கூட கொள்கையைப் பற்றி அல்லாமல் வேறு காரணமாய் இருந்தால் விட்டுக்கொடுத்தும் அதைச் சரிப்படுத்திக் கொள்வது சுலபமான காரியமேயாகும்.

இன்று "இருகட்சி"களுக்கும் உள்ள கொள்கை பேதமாவது, ஒரு கட்சி திராவிடர் கட்சி, என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறது;

மற்றொன்று S. I. L. F. என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறது.

ஒன்று ஜஸ்டிஸ் கட்சியார் இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடாது, திராவிடர் என்று சொல்லிக் கொள்ளவேண்டும் என்கிறது;

மற்றொன்று நாம் இந்துக்கள் தான் என்கிறது.

ஒன்று தேர்தலுக்கு நிற்கவேண்டுமானால் ஓட்டர்கள் மதிக்கும்படியான தன்மை பெறவேண்டும், அல்லது ஓட்டர்களை நம் வசப்படுத்தவேண்டும் என்கிறது;

மற்றொன்று அதுபற்றிக் கவலை இல்லை, எப்படியாவது நிற்போம், தோற்றாலும் பாவாயில்லை ஒரு சேன்ஸ் பார்ப்போம் என்கிறது.

ஒன்று அப்படிச்செய்ய பணம், ஆள் வேண்டாமா என்கிறது;

மற்றொன்று அதைப்பற்றிக் கவலை வேண்டாம், எலக்ஷனுக்கு நிற்கிறோம் என்று சொல்லிவிட்டால் பலர் நிற்பார்கள் என்கிறது.

ஒன்று, நிற்கின்ற ஆட்களை ஓட்டர்கள் "நீ என்ன தியாகம் செய்தாய்? உன் கொள்கை என்ன? காங்கிரசுக்கும் உனக்கும் என்ன பேதம்?" என்றால் என்ன சொல்லுவது? என்கிறது;

மற்றொன்று அதைப்பற்றிக் கவலை இல்லை; வகுப்புவாரி பிரதிநிதித்துவம்தான் நம் கட்சிக் கொள்கை என்று சொன்னால் போதும் என்கிறது.

ஒன்று திராவிடநாடு பிரிக்கப்படவேண்டும் என்கிறது;

மற்றொன்று அது வேண்டாம், அதுபற்றிப் பேச்சு வேண்டாம் என்கிறது.

ஒன்று நமக்குத் தனித்தொகுதியாவது வரட்டும் அப்புறம் தேர்தலில் நிற்கலாம் என்கிறது;

மற்றொன்று அது பற்றி இப்போது பேசவேண்டாம் என்கிறது.

இப்படியாக இன்னும் சில பேதங்கள் கட்சிகளில் இருக்கின்றன. இதை எப்படிச் சரிப்படுத்துவது என்று கேட்கிறோம்.

யாராவது ஒருவர்வசம் கட்சியை ஒப்படைத்துவிட்டு அவர்களை ஜஸ்டிஸ் கட்சிக் காரியம் பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிட்டு பெரியார் விலகிக்கொண்டுவேறுவேலை

## வேண்டுகோள்

திருச்சி மாநாட்டுக்கு உங்கள் ஜில்லா கோட்டாப்படி உங்கள் பங்கை உடனே அனுப்பிக் கொடுங்கள். யாராவது வந்து கேட்கவேண்டுமென்று காத்திருக்காதீர்கள். ஏராளமான பிரதிநிதிகளைச் சேர்த்துவையுங்கள்.

0 0

மாநாடு டிக்கட்டுகள் அனுப்பப்பட்டவர்களும், தருவித்தவர்களும், அதன் தொகைகளை தயவுசெய்து 13-ந் தேதிக்கு முன் ஆங்காங்கு அனுப்பிக்கொடுக்கும்படி வேண்டுகிறோம்.

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

15-9-45 வரையில்

அங்கத்தினர்கள் 33970

சந்தா ரூ. 3371—2—0

பார்க்கலாம் என்பது சிலருடைய அபிப்பிராயம். பெரியார் இவருக்கு இதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் யாராவது ஒரு உழைப்பாளியோ அல்லது பெரிய மனிதர் என்கின்ற லிஸ்ட்டில் சேர்ந்த எதாவது ஒரு செல்வரோ என்பவர் கையிலேயே கட்சியை ஒப்படைத்துவிடுவதாகவே வைத்துக்கொண்டாலும் இந்த 35,000 மெம்பர்களும், 250 கிளைகளும் அவருக்குக் கட்டுப்படுவரா? அவரால் இவைகளை வைத்து நிர்வாகம் செய்து கொண்டாற்ற முடியுமா? அப்படிப்பட்டவர் பெரிய மனிதர், செல்வரான் என்பவர்களில் இருக்கிறாரா என்று சிலர் மற்றொரு கவலை கொள்ளுகிறார்கள். இவை எப்படியோ இருக்கட்டும்.

பொதுவாக உள்ள சில பெரியவர்கள் மாநாட்டுக்கு வந்து "இரு கட்சி" சார்பாகவும் பேசி எதாவது ஒரு முடிவு கண்டு அதற்குத் தகுதி உடைய ஒருவரைப் பிடித்து குறைந்த அளவு ஒரு மூன்று வருஷ காலத்துக்கு ஆவது பதவிக்கும் போவதில்லை, தலைவனாகவே இருக்கிறேன் என்கின்ற கொள்கைக்கு ஒப்புக்கொள்ளும் ஒருவரை, அல்லது முழு நேரத் தொண்டாற்றும் ஒருவரைப் பிடித்து அவர் வசம் நிர்வாகத் தலைவர் பதவியையோ அல்லது சர்வாதிகாரத் தலைவர் பதவியையோ ஒப்புவிக்க முயற்சித்தால் நாங்கள் யாவரும் சம்மதிக்கலாம் என்றும் சம்மதிக்காவிட்டாலும் சம்மதிக்கச் செய்வது கஷ்டமாக இருக்காது என்றும் கருதுகிறோம்.

இதுதான் இப்படிப்பட்ட காரியத்திற்குச் சமயம். இம்மாநாடு முடிந்துவிட்டால் பிறகு நிலைமை வேறாகப் போய்விடும் என்றே கருதுகிறோம். ஆகவே "ராஜியையோ ஒன்றாக்குவதையோ", "பிளவு இருக்கக்கூடாது" என்பதையோ உண்மையாய் விரும்புகிறவர்கள் அருள்கூர்ந்து இதை இப்போதே கவனிக்கவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

மாநாட்டு நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 20-9-45 வியாழக்கிழமை திருச்சி டவுன் ஹால் மண்டபத்தில் நடக்கும்.

## திருச்சி
### சு. ம. ஜஸ்டிஸ் மாநாடுகள் வசூல் விவரம்

| | ரூபாய் |
|---|---|
| தஞ்சை | 1500 |
| கோவை | 1000 |
| சேலம் | 675 |
| திருநெல்வேலி | 375 |
| வட ஆற்காடு | 275 |
| மதுரை | 250 |
| திருச்சி | 200 |
| தென் ஆற்காடு | 150 |
| வரவேற்புக்கழகம் | 160 |
| | 4585 |

இதுவரை மேற்கண்ட 4500 ரூபாய்களுக்கு மேல் வசூலாகி இருக்கின்றது. பாக்கி கோட்டா ரூபாய்கள் 20ந் தேதிக்குமுன் எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை, செங்கல்பட்டு ஜில்லாக்கள் இதுவரை எதும் செய்ததாகத் தெரியவில்லை. தஞ்சைஜில்லா கோட்டா 1500 ரூபாயே ஆனாலும், கோவை ஜில்லாவுக்குப் பின்வாங்காத அளவுக்கு; அதாவது இனியும் 1000 ரூபாய்க்குமேல் அனுப்பப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதலால் எல்லா ஜில்லா தோழர்களும் அன்புகூர்ந்து வாக்குறுதியை, கோட்டாவை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிக்கொள்ளுகிறோம்.

## பெரியார் தொண்டர் படை

"திருச்சி மாநாட்டைப் பற்றி ஒவ்வொரு ஊரிலும் திராவிடர் கழக, சுயமரியாதைச் சங்க நிர்வாகிகள் சுவர் (போஸ்டர்) வைத்துப் பேசியும், நோட்டீஸ் மூலம் அறிவித்தும், பிரசாரம் செய்து, பெருவாரியான திராவிட மக்களைத் திரட்டி, ஏராளமான பிரதிநிதிகளைச் சேர்த்தும், பொருள் வசூலித்தும் உதவிசெய்ய எல்லா ஊர்களிலும் தொண்டர் படைகளை அமைத்து செயல் புரிய வேண்டுகிறோம்" என்று பெரியார் தொண்டர் படையினர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை இந்தி எதிர்ப்புத் தோழர் ஏ. டி. சுப்பையா, பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் இலங்கை வரும் விஷயமாகப் பேசிவிட்டு, சென்னை மார்க்கமாக இலங்கை செல்லுகிறார்.

## எதிர்பாருங்கள்

எம். ஆர். இராதா அவர்கள் நடத்தி வரும் "திராவிட மறுமலர்ச்சி நாடக சபை"யாரால் கூடிய சீக்கிரம் அடியிற்கண்ட நாடகங்கள் நடைபெறும்,

"இராமாயணம்"
கதை, வசனம்-பெரியார்
ஈ. வெ. இராமசாமி அவர்கள்

"கணையாழி"
கதை, வசனம்-பாரதிதாசன் அவர்கள்

"கவியின் வெற்றி"
கதை-பாரதிதாசன்,
வசனம்-பாவலர்பாலசுந்தரம்.

"வறுமைப் பித்தன்"
கதை, வசனம், பாட்டு—
பாவலர் பாலசுந்தரம்.

## எத்தனை லட்சம் உடைந்திருக்கும்?

சில மாதங்களுக்குமுன் சேலம்-ஜில்லா மேலூர், கண்டர் உயர்நிலைப்பள்ளி மாணவர்களிற் சிலர் "நவீன நந்தனார்" என்ற நாடகத்தை நடித்தபோது, லிங்கத்தை உடைத்துவிட்டனரென்று ஓலமிட்டு மாணவரிடையிலும், ஈ. வெ. ரா. வின் நாத்திகப் பிரசாரம் பரவிவிட்டதே என்று கூக்குரலிட்டனர் ஆத்திக சிகாமணிகள். ஆனால் இதே ஆத்திக மக்களால் விநாயக சதுர்த்தியன்று பூஜையும் படையலும் நடத்தித் தோப்புக்கரணமும் போட்டு, பின்னர் ஆற்றிலும் குளத்திலும், கிணற்றிலும் விட்டெறியப்பட்ட களிமண் பிள்ளையார் உருவங்கள் எத்தனை லட்சம் அழிந்திருக்கும்! இது மாத்திரம் ஆத்திகமா?

## மணமகள் தேவை

"வயது 25ல், உடற்குறைவின்மையும், உயரமும், சிவப்பும் உள்ளவரும், வித்வான் படித்தவரும், தற்போது ரூ. 35-0-0 வருமானமுள்ளவரும், தொண்டைமண்டல முதலியார் வகுப்பைச் சேர்ந்தவருமான திராவிட இன எழுச்சியுள்ள மணமகனுக்கு, போதிய வருமானம் வரும் நிலம் 3-ஏக்கர் வரை சொந்தத்தில் உண்டு. அப்படிப்பட்டவருக்கு தொண்டைமண்டல முதலியார் வகுப்பைச் சேர்ந்தவரும், 20க்குள்ளாக வயது உள்ளவரும், 10வது வகுப்புவரை படித்தவரும், சிவப்பும், அழகும் உள்ளவரும், போதிய வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவரும், உடற்குறையில்லாதவரும், தன்னுணர்வெழுச்சியோடு, தாலி கட்டா மணத்தை விரும்பும் சீர்திருத்தக்காரருமான ஓர் மணமகள் தேவை. கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும்"

விலாசம்:- K. K. C/o குடி அரசு,
ஈரோடு

ரோஜா முத்தையா

# தோழர் பட்டக்காரர் மரணம்

(கைவல்யம்)

கோயமுத்தூர் ஜில்லா பழயகோட்டைப் பட்டக்காரர் மரணமடைந்தார் என்பதை பத்திரிகைகளில் தெரிந்திருப்பீர்கள். மரணமடைந்தவர்களின் வாழ்க்கையைப் பற்றி எழுதுவது வழக்கம். அவருடைய வாழ்க்கையில் சில முக்கியங்களிருக்கின்றன, நான் அவர்கூடவே பல வருடங்களிருந்தமையால் அதை எழுதுகிறேன்.

அவருக்குப் போதுமான நன்செய் பூமியும், தானியங்கள் விளையக்கூடிய புன்செய் பூமிகளும், பல தோட்டங்களும், மாடுகள் மேய்ச்சலுக்குவேண்டிய ஏராளமான கொரங்காடுகளும், ஆடு, மாடு, குதிரைகளுமுண்டு. இரண்டு ஆண் குழந்தைகளும் ஐந்து பெண் குழந்தைகளுமிருக்கின்றன. செல்வமும் அந்தஸ்துமுடைய குடும்பங்களிலிருந்து ஐந்து கலியாணங்கள் தன் பிள்ளைகளுக்குச் செய்திருக்கிறார். வைத்தியக்குளி ஜெமீன்தாரும், வெள்ளக்கிணர் வெள்ளியங்கிரிக்கவுண்டரும் அவர் சம்பந்திகள், அவர் குடும்பத்தொழிலான விவசாயம் மாடு வளர்ப்பு இவைகளை இரண்டு பிள்ளைகளும் தெரிந்திருக்கிறார்கள். நல்ல குணமும் ஆலோசித்துப்பார்க்கும் புத்தியுமுடையவர்கள். அந்தஸ்துடைய மூன்று மருமகன்மார் பேரப்பிள்ளைகள் மற்ற எல்லா சம்பத்துக்களுடன் வாழ்ந்து 59-வது வயதில் காலமானார். இந்த நிலையில் பார்க்கையில் கவலைப்படக் காரணமில்லை, என்றாலும் அவருடைய விவசாயம் மாடு வளர்ப்பின் அனுபோகங்கள் அவருடைய குடும்பத்திற்கும் நாட்டிற்கும் இனியும் சிறிது காலமேனுமில்லாமல் போய்விட்டதே என்று கவலைப்படத்தான் வேண்டும்.

தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, தேவஸ்தான போர்டு, நில அடமான பாங்கு முதலியவைகளின் பலநாள் தலைவராக இருந்திருக்கிறார். தாராள குணமுடையவர் என்கிற பெயரும் வாங்கினார். ராய்பகதூர் என்கிற ராஜாங்கப் பட்டமுண்டு, எந்தப் பொது தருமத்திற்கும் சிறிதாவது பணம் கொடுப்பார். கவர்னர்களுக்கு மூன்று நான்கு தடவை தன் வீட்டில் விருந்தும் நடத்தியிருக்கிறார். இந்தப் பெயர்களும், பெருமைகளும் அநேகருக்கு வரக்கூடியதும் அடையக்கூடியதுமாகும்.

அவர் சிநேகிதர்கள், பந்துக்கள் இவர்களை உபசரித்து விருந்து அளிப்பதில் பெயர்போனவர். அவர் வீட்டுக்கு வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு போடுவோர். கிழவுக்கு வீட்டுப்பக்கம் வந்து ஒதுங்கினவனும் சாப்பாட்டு நேரமானால் சாப்பிடவேண்டியதுதான். ஐயையோ, பல் கலோர வெட்டு வழியில் நின்றுவிட்டால் அதிலிருப்பவர்களைக் கூட்டிவரச் சொல்லி சாப்பிடுகிறவர்களுக்குச் சாப்பாடும், சாப்பிடாதவர்களுக்குப் பால், தயிர், பழமும் கொடுக்கச் சொல்லுவார். பரதேசி, வழிப்போக்கன் சாப்பாடில்லாமல் வெளியிலிருந்தாலும், தூங்கினாலும் ராத்திரி பத்து மணிக்கு மேல் எழுப்பி சாப்பாடு போடச் சொல்லுவார் இவைகள் அவர் வீட்டிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் நடந்துவரும். இதனால் சாப்பாடு போடுவதில் பட்டக்காரர் சிறந்தவர் என்கிற பெயர் கோயமுத்தூர் ஜில்லாவெல்லாம் சொல்லுகிறார்கள். இவரைப் பிரபுவென்று சொல்லுவதோடு தாராள கொடைக்கொருவர் என்கிற இனத்தில் சேர்க்கவேண்டும்.

நமது தென்னாட்டு மாட்டு ஜாதிகளில் காங்கயம் சாதி ஒன்று. இச்சாதி சிறிய இனம், கொம்பு சிறியவை, வெட்சனத்திலும் பெருந்தாது. மைலை, வெள்ளை, சிவப்பு, பில்லை முதலிய நிறங்களையுடையது. மைசூர் பூரணய்யா, கொல்லேகால மலையன், பரூர், தருமபுரி, ஓங்கல் முதலிய ஜாதி மாட்டுடன் காங்கயசாதி மாட்டை ஒப்பிட்டுப்பார்த்தால் காங்கயம் கீழாகவே தோணும். பட்டக்காரர் அவர்கள் அதைத்தெரிந்து பழய காங்கய சாதியிலிருந்தே பொலிவு காளைகளுக்குதவும் கன்றுகளைப் பொறுக்கி எடுத்து வளர்த்து உத்தமமான பசுவுடன் கலக்கச் செய்து அதில் உண்டான கன்றுகளை வளர்த்து இப்படியே சில தலைமுறை கன்றுகளை உண்டாக்கி வளர்த்து அதிலிருந்து ஒரு புது காங்கயம் சாதி மாட்டை உண்டாக்கிவிட்டார். அது அவர் பண்ணையம், காங்கயம் மாடு என்னாம் பரவ, ஜில்லா பூராவிலும் பர ஜில்லா பேர்கள் இவரிடம் விலைக்கு வாங்கி அனுப்புகிறார்கள்.

காங்கயசாதி என்கிற அவருடைய மாட்டின் உற்பத்தியும், வளர்ப்பும், பண்ணையும், அவைப் பராமரிப்பதும் டில்லிக்குக் கொண்டுபோய் நடந்த கண்காட்சியில் பிரதானமாக வைத்து அதன் திமிலையும் உடம்பின் அமைப்பையும், கால் உறுதியையும் வெள்ளைக்கார விவசாயிகளும் ஜனங்களும் கண்டு ஆச்சரியப்பட்டது அவருடைய உழைப்பின் பெருமை.

இவர் பல நாள் பொறுமையுடன் உழைத்து உண்டுபண்ணின காங்கேயம் சாதி மாடுகள் உறுதியும் சுத்தமுமுடையவை மயிலை நிறமும் சிறு ரோமமும் சன்னமானதும் போதுமான நீளத்துடன் அழகான கொம்பும் முகமுமுடையவைகள். மற்ற ஜாதி மாடுகளுக்கு காலில் நீரிறங்குவது போல் இம்மாடுகளுக்கு நீரிறங்காது. இளைத்தாலும் வேலை செய்யும். வாய்சொர்த்து மட்டுப் பந்து வரும் வேலை செய்யும். வண்டி நிறைய பாரம் வைத்தாலும் இழுக்கும். மாட்டுப் பண்ணை, வளர்ப்பு, ஆராய்ச்சி முதலியவைகளில் மேம்பட்ட ஆங்கிலேயர்கள் இவர் பண்ணையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு எழுதிவிட்டுப் போயிருக்கிறார்கள். இந்திய கவர்ன்மெண்டு விசாரணை கமிஷன் ரிப்போர்ட்டில் மாடு வளர்ப்பதில் இந்தியாவில் இரண்டு பேர்களிருக்கிறார்கள். அதில் இவர் ஒருவர் என்று எழுதியிருக்கிறது. நமது நாட்டில் மனித வளர்ச்சிக்கு அடுத்தது மாட்டு வளர்ச்சி. அதை விருத்திபண்ணி நமது நாட்டிற்கு உதவின பழயகோட்டைப் பட்டக்காரரின் மரணம் அவர் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் நம் நாட்டுக்கே நஷ்டமாகும். கீழாகவிருந்த காங்கேய ஜாதி மாட்டைத் திருத்தி உயர்ந்த ஜாதியாகச் செய்து நம் நாட்டுக்குப் பெருமையை உண்டுபண்ணின பட்டக்காரர் அவர்களை நமது நாடு என்றும் மறவாமலிருக்க ஒரு சின்னம் வேண்டும். கொங்கு வேளாளர்களுக்கும், காங்கய நாட்டுக்கும் அதில் தனி எண்ணம் வேண்டும்.


வாழ்க பெரியார்! திராவிடநாடு திராவிடருக்கே!!

## அரிய சந்தர்ப்பம்

திராவிடர்களே! திராவிடத் தாய்மார்களே!!

திருச்சியில் நடக்கப்போகும் திராவிடர் கழக மாநாட்டுப்பந்தலுக்குப் பக்கத்தில் எங்கள் ஜெயராம் வைத்தியசாலை திறக்கப்படும்.

அதுபோது எதிர்பாராத விபத்துக்குள்ளானவர்களுக்கு முதல் சிகிச்சை இலவசமாக செய்யப்படும். மற்றும் எங்கள் டிஸ்பென்சரியில் தயார்செய்த எல்லாவித மருந்துகளும் விற்கப்படும்.

எமது வியாதியஸ்தர்கள் டாக்டரை நேரில் சந்திக்க வசதிசெய்யப்படும், உடல் நலம்பெற திரண்டு வருக! எதிர்கால போராட்டத்திற்கு உடலை சுத்தி செய்க!!

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் மேலவீதி, கும்பகோணம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாட்டா நானு வேலை நாயா அலைக்காப்படி அரிசி பொங்கிக் கிட்டு என் இஷ்டப்படி இருந்துக் கிறேன், நீ எப்படியோ நடந்துக் கோ.

ம:- இதென்னடி அம்மா ஏளவா இருக்குது! அவுங்க ஆருக்கோசரம் மகாநாடு நடத்துறாங்கோ, நம் மூட்லெ என்ன பேரெளவு?

க:- இதாப்பாரு, இசமா சொல்லேரேன் மகாநாட்டுக்கு வந்து அவுங்க சொல்லறதெ கேளு, இல்லாட்ட இங்கியே இருந்துக்கோ, உன் இஷ்டப்படி நடந்துக்கோ, நானு இனிமேல் இந்த வூட்லெ காலெடுத்து வெக்கமாட்டேன் தெரியுமா? என்ன முட்டாள் தனம்? அக்கிரமம்? என்ன செலவு? நெனச்சா கோயிலு, நெனச்சா சினிமா, நெனச்சா பண்டிகை, கண்டபடி செலவு நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். நல்லதனமா சொல்லியும் பாத்தேன். கொரங்குப்புடியாப் பிடிவாதம் பண்றே, இன்னமே இதுதான் மருந்து. நானு போகப்போரேன் அங்கெ உங்க வூட்டுப் பொம்பளெ வல்லையா ன்னு கேட்டாக்க, நம்ம வூட்லெ பொம்பளை இல்லைங்கோ இன்னு சொல்லிப் போடுறேன் இதுதான் கடெசிதடவை என்ன சொல்றே?

ம:- நானு காத்தாலெ ஆருமுகத்திலே முளிச்சனோ தெரியல்லே! எனவா வந்து விடிஞ்சது, அந்த தமாஸ்காரப் பட்டுக்கெடப்பான், பாவாய்போனவன் இங்கே வந்தான். சரி நானு வர்றனுங்கோ, என்னை முன்னாலெ கொண்டு போய் உக்காரவெக்கணுங்கோ!

க:- சரி வா வெளியிலெ இருந்துக்கிட்டே சொல்லலாம். கொஞ்சம் யோசிச்சி இருக்கான்னோ ஒருத்தருக்கும் தெரியாமெ சேர்ந்து வாரியா.

ம:- வர்ரேன், வந்து தொலையிறேன். இதெல்லாம் நீங்க சொல்லல்லே, பொல்லாக் கிரகம் சொல்ல வக்கிது. அப்பவே கோடாங்கி சொன்னான். அதுக்கு அவன் சொன்னாப்லெ சாந்தி பண்ணி இருந்தா இது வந்திருக்காது. உங்க பேச்சைக்கேட்டு சாந்தி கூட, தோசமேதுன்னு சொல்லப்போக இப்படி விடிஞ்சிது. இன்னம் அந்தக்கிரகம் என்னென்ன கஷ்டப் பண்ணப் போகுதோ, ஆண்டவனே காளியாயி நீதான் கதி!

க:- சரிசரி வாயை மூடு, தயாராய் இரு, போகலாம்.

(இதை ஒவ்வொருவரும் அவர்கள் மனைவிகளுக்குப் படித்துக் காட்டிக் கட்டாயம் ஜோடியாய் வரவேண்டுமாய் வேண்டுகிறோம்.)

## "பெரியார் இல்லம்" திறப்பு விழா

விருத்தாசலம், கடைத் தெருவில் 102-ம் எண்ணுள்ள, விருத்தாசலம் எம். ஆர். தாஸ் கம்பெனி உரிமையாளர் தோழர் சி. முனிசாமி அவர்களின் இல்லத்திற்குப் "பெரியார் இல்லம்" எனப் பெயர் வைக்கப்பட்டு 1-9-45 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு விருத்தாசலம் தோழர் கே. நாராயணசாமி பிள்ளை பி. ஏ., பி. எல்., அட்வகேட் அவர்கள் தலைமையில் தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திராவிடப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் திராவிட நாட்டில் திராவிடர்களிடையே தற்பொழுது ஏற்பட்டுள்ள திராவிட இன எழுச்சி, புத்துணர்ச்சி, சீர்திருத்த நோக்கம் இவைகளைக் குறித்து சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் அரிய சொற்பொழிவாற்றினார்கள். சேலம் எம். ஆர். சித்தையன், பண்ருட்டி புதுப்பேட்டை திராவிட கழகத்தார் மற்றும் பலரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துக் கடிதங்கள் படிக்கப்பட்டதன் பின் தோழர் ஆ. திராவிடமணி நன்றி கூற "பெரியார் இல்லம்" திறப்பு விழா நிகழ்ச்சி இனிது முடிந்தது. கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.

உள்ளூர், வெளியூர் அன்பர்களுக்கு அன்று மாலை 4 மணிக்குத் தேநீர் விருந்தும், இரவு விருந்தும் தோழர் முனிசாமி அவர்களால் நடத்தப்பட்டது.

## விலாசமாற்றம்

"விடுதலை" ஆசிரியர் தோழர் எஸ். குருசாமி பி. ஏ., அவர்களுடைய தற்கால முகவரி: 143, அம்பட்டன் வாராவதி ரோடு, திருவல்லிக்கேணி போஸ்ட், சென்னை.

* *

வேலூர் தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., அவர்களின் தற்கால முகவரி: C/o "குடி அரசு" ஆபீஸ், ஈரோடு.

## கதர்

வடநாட்டில் யந்திரப்பெருக்கம் அதிகமாகும் இந்த நேரத்தில் சொரணை கெட்ட தமிழ்நாட்டிலே கைராட்டினம் பெருகி வருகிறது. இந்தியா முழுதும் தயாராகும் கதர் துணியில் மூன்றில் ஒரு பாகம் தமிழ்நாட்டிலேயே தயாரிக்கப் படுகிறதாம்! என்ன பெருமை!

## விருத்தாசலத்தில் திராவிடர் பொதுக் கூட்டம்

1-9-45 சனிக்கிழமைமாலை 7மணிக்கு இவ்வூர் பகுத்தறிவுப் புலவர் கா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் விருத்தாசலம் ரேடியோ மைதானத்தில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களும், எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ. அவர்களும் "திராவிட மக்களும் தேர்தலும்" என்பது பற்றிப் பேசினார்கள். தோழர் ஆ. திராவிடமணி நன்றி கூற இரவு 11 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.

கேள்வி கேட்கப் போவதாகப் பேசிக்கொண்டிருந்த சில எதிரிகள் பெரியாரின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவைக் கேட்ட பின் கேள்வி கேட்க வழியின்றிப் போய்விட்டனர் எனத் தெரிகிறது.

## மகிழ்ச்சி

கடலூர் இளைஞர் சொல்வன்மைக் கழகத்தார் நடத்திய மாணவர் பேச்சுப் போட்டியில் கடலூர் திராவிட மாணவர் கழகச் செயலாளர் தோழர் சி. இளவழகன் முதற்பரிசு பெற்றதற்காக ஷை மாணவர் கழகத்தார் தம் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

## கேரளகாங்கிரஸ்

காங்கிரஸுடன் தனக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டதாலும், அதன் சுயநிர்ணய உரிமைக்கொள்கை தனக்குப் பிடிக்காததாலும் கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் கே. பி. மொய்தீன் குட்டி தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

## திட்டக்குடியில் சுயமரியாதைத் திருமணம்

2-9-45 ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணிக்கு திராவிடப் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் தலைமையில் திட்டக்குடி தோழர் கருப்பையா அவர்கட்கும், தோழர் அசனாம்பாள் அவர்கட்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. சிக்கனமாகவும், சீர்திருத்த முறையிலும் திராவிடத் திருமணங்கள் நடக்கவேண்டியதன் அவசியத்தை விளக்கி பெரியார் அரிய சொற்பொழிவாற்றினார்.

---

செப்டம்பர் இறுதியில் தூத்துக்குடியில் நடக்கவிருந்த அருந்ததியர்குல மாநாடு டிசம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

# குடந்தையில் நடந்தது?

15-8-45 அன்று கும்பகோணம் பிரம்மவித்யா லாட்ஜ் மண்டபத்தில் கம்யூனிஸ்டு மாணவர்களால் "தாகூர் தினம்" கொண்டாடப்பட்டது. தோழர் பரமசிவம் என்பவர் பேசுகையில் உள்ளூர் கல்லூரியில் ஆரியர்—திராவிடர் பிரச்சினை அதிகமாயிருப்பதைக் கண்டித்துக் கூறினார். அப்பொழுது கூட்டத்திலிருந்த சில திராவிட மாணவர்கள் கேள்வி எழுதிக் கொடுத்து உடனே பதிலளிக்கக் கேட்டனர். பதில் கூற முடியாதென்று கூட்டத் தலைவர் கூறிடவே சிறு குழப்பம் ஏற்பட்டது. அச்சமயம் கட்சிப் பிரமுகர்களில் ஒருவரான எம். ராமசாமி ஐயர் என்பவர் வந்து திராவிட மாணவர்களை நோக்கி "கூச்சலிடாதீர்கள். உங்களைக் கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளுவேன்" என்று சொல்லவே வாக்குவாதம் முற்றியது. "பெரியார் வாழ்க", "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற ஒலி மிகுந்தது, அவர் சொன்னதை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கேட்கப்பட்டது. இதனால் சுமார் ஒருமணிநேரம் கூட்டம் நடைபெறாமல் போகவே, கட்சிப்பிரமுகரும், "ஹிந்து" நிருபருமான தோழர் என். ஆர். ராமானுஜம் என்பவர் வந்து தனது தோழர் கூறியது தவறுதான் என்றும், மன்னிக்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். அத்துடன் கூட்டம் கலைக்கப்படவே, திராவிட மாணவர்கள் வெற்றிக் கோஷங்களுடன் வீடு திரும்பினர். (ஓ. கி.)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்களால் கோட்டை கட்டின திப்புசுல்தானுக்கு நவராத்திரி பூசையில்லை. அந்த திப்புவை ஜயித்த ஆங்கிலேயருக்கு பாருவேட்டையுமில்லை. தொழிலாளிகளுடைய ஆயுதங்களெல்லாம் துர்க்கையில்லாத நாட்டிலிருந்தே வருகின்றன. இப்போதுள்ள ஆணியும் அதையடிக்கும் சுத்தியலும் அதைப் பிடுங்கும் கொறடும் துர்க்கைக்குத் தெரியாது. இப்பொழுது துர்க்கையில்லாத நாட்டில் உண்டாக்கப் பட்டிருக்கும் ஆயுதங்களைப் பற்றி நமது துர்க்கைக்குத் தெரியாது, சுயபுத்தியில்லை தெரிந்திருந்தால் பலகாலமாக வருகிறவர்களெல்லோருக்கும் தன்னாட்டை அடிமை கொள்ள இசைவார்களா? துர்க்கை என்று ஒன்று இருக்குமேயானால் நம்மால் கொடுக்கப்படும் பூசைக்கு நன்றிகாட்டாமல் அன்னியரால் இத்தனை காலமாக கொள்ளையடித்து பண்ணின கொடுமைகளைக் கண்டு சும்மாயிருக்குமா?

—கைவல்யம்

# திராவிடக்கழகங்கள்

கும்பகோணம் திராவிடர் கழக உறுப்பினர் கூட்டம் 21-8-45 மாலை 7மணிக்கு தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் கூடி கீழ்கண்ட நிர்வாகிகளைத் தெரிந்தெடுத்தது: தோழர்கள் பி. முத்துத்தனபாலன் பி.ஏ.பி.எல்., தலைவர்; பி. ஆர். பொன்னுசாமி, எஸ். ஆர். சுப்ரமணிய மூப்பனார், எஸ். ரெங்கசாமி துணைத் தலைவர்கள்; கே. கே. நீலமேகம், எம். ராமச்சந்திரன் செயலாளர்கள்; ஏ. சிங்காரவேலு பொருளாளர்; வி. சின்னதம்பி கணக்குப் பார்வையாளர்; மற்றும் 19 பேர் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்.

சென்னை, அடையாறு, (40வது டிவிஷன்) வட்டாரத்திற்கு சென்ற 26-8-45 திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. தோழர்கள் கே. மாணிக்கமணி தலைவர்; எம். கே. கிருஷ்ணமூர்த்தி செயலாளர், பி. ஆர். சிவநாதன், எம். ஆறுமுகம், டி. லோகநாதன் நிர்வாகக் குழுவினர்.

சென்னிமலை திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் 2-9-45 மாலை கூடி 12-9-45-ல் நடத்தவிருக்கும் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கத் தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்களை அழைப்பதென்றும், பழையகோட்டைப் பட்டக்காரர் மறைவுக்காக அநுதாபம் தெரிவிப்பதாகவும் தீர்மானித்தது.

சிதம்பரம் தாலூகா வல்லம்படுகை திராவிடர் கழக ஆரம்பக் கூட்டம் 19-8-45-ந் தேதியிலும், 23-8-45-ந் தேதியிலும் தோழர் ஆர். எஸ். அண்ணாசாமி தலைமையில் கூடியது. முதல் கூட்டத்தில் பாலகுருசாமி, தர்மலிங்கம், சிவலிங்கம் ஆகிய தோழர்களும், அடுத்த கூட்டத்தில் இளம்வழுதி, தியாகராசன், மணவழகன் ஆகிய தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

திருவத்திபுரம் சுயமரியாதைத் திராவிடர் கழகத்தின் தொடக்கவிழா 30-8-45 மாலை நடைபெற்றது. தோழர்கள் சி. என். அண்ணாதுரை, டி. வி. நாராயணசாமி, ஆம்பூர் வெங்கட்ராமன் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். சுமார் 2000 மக்களில் பெண்களும் அதிகமாகக் குழுமியிருந்தனர். தோழர் சி. வி. சுப்பராயன் தலைமையில் தோழர் வெங்கட்ராமன் கொடியேற்றியதும் தோழர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றினார். மறுநாள் தோழர் எம். கந்தசாமி தலைமையில் பெரியார், பன்னீர்செல்வம் படங்கள், கழகம், இளைஞர் படிப்பகம் ஆகியவற்றை முறையே தோழர்கள் புலவர் கோவிந்தனார், ஆம்பூர் வெங்கட்ராமன், டி. வி. நாராயணசாமி, சி. என். அண்ணாதுரை ஆகியோர் திறந்துவைத்தனர். செயலாளர் நன்றிகூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

சேலம் செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழக கமிட்டிக் கூட்டம் 6-9-45 இரவு தோழர் எம். பி. நடராசன் தலைமையில் கூடி, எப்போதும் திராவிடர் கழக மகாநாட்டிற்குப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைத் தலைவராகத் தெரிந்தெடுக்க வரவேற்புக்கழகத்தாரைக் கேட்டுக் கொள்வதாயும், பழையகோட்டை பட்டக்காரர் மறைவுக்கு அநுதாபம் தெரிவிப்பதாயும் தீர்மானித்தது.

சென்னை சைதாப்பேட்டை திராவிட இளைஞர் கழகக் கூட்டம் ஒன்று 22-8-45-ல் தோழர் சோமசேகரன் தலைமையில் நிகழ்ந்தது. தோழர்கள் மா. குமாரசாமி, கு. சண்முகசுந்தரம், சை. பொ. சச்சிதானந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சேலம், அம்மாப்பேட்டை திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் தோழர் அர்த்தநாரி தலைமையில் நடைபெற்று, கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.- "திருச்சியில் நடைபெறும் மாகாண ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டிற்கும் பெரியாரே தலைமைதாங்க வேண்டும்; கழக 6-ம் ஆண்டுவிழாவுக்குப் பெரியார், அண்ணாதுரை, ஜனார்த்தனம், அருணாசலம், எம். ஆர். ராதா ஆகியோரை அழைப்பது; பழையகோட்டைப் பட்டக்காரர் மறைவுக்கு அநுதாபம் தெரிவிக்கிறது."

# காந்தியாரின் புரட்சி?

"காந்தியார் அரசியலில் மட்டுமல்ல, மதத்துறையிலும் பல புரட்சிகளைச் செய்துவருபவர். உதாரணமாக சமீபத்தில் சுந்தர்பா குடிசையில் அவர் முன்னிலையில நடத்திவைக்கப்பட்ட தெண்டுல்கர்—இந்துமதி திருமணத்தில் கூட இரண்டுபெரும் புரட்சிகரமான (?) காரியங்களைச் செய்திருக்கிறார். முதலாவது திருமணம்செய்துகொண்ட அந்த தம்பதிகளை சுயராஜ்யம் கிடைக்கும்வரை குழந்தை பெறக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறார், இரண்டாவது சமஸ்கிருதத்திலிருந்து மந்திரங்களை இந்துஸ்தானியில் மொழிபெயர்த்து சடங்குகளை நடத்தியிருக்கிறார்" என்று தேசிய ஏடுகள் தீட்டியுள்ளன.

இந்த இரண்டு செயல்களும் எவ்வளவு புரட்சிகரமானவை (இல்லை, அசட்டுத்தனமானவை) என்பது கேட்போருக்கே விளங்கும்.

# திருமணங்கள்

குளூர் தோழர் எஸ். நடேசபிள்ளை மகன் மருதாயம்மாளுக்கும், கோவைத் தோழர் நஞ்சைய பிள்ளை மகன் ரங்கசாமிக்கும், 19-8-45 அன்று மணமகன் இல்லத்தில் புரோகிதமெழிந்த திருமணம் நடைபெற்றது. இச்சமூகத்தில் இதுவே முதல் சீர்திருத்த மணமுறையால் புரட்சிகரமாக இருந்தது.

29-7-45 திருச்சி தமிழ் நகர் விநாயக சங்க ஆதரவில் தோழர் ஜே. எஸ். ராமானுஜம் தலைமையில் நடைபெற்ற நடராஜஸ்வாமி-பத்மா விதவை மணத்தில் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். பார்வதி, க. பிச்சைமுத்து, வி. பெருமாள், டி. மாணிக்கம், நடேசஸ்வாமி, எ. வி. பெரியண்ணன், வீரமணி, சிகாமணி, எஸ். சிவலிங்கம், பொன்னுசாமி முதலியோர் பேசினர். "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ 1 அனுப்பப்பட்டது.

9-8-45 இலஞ்சி இளைஞர் சங்க சார்பில் தோழர்கள் அங்கப்பன்-செல்லப்பாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் குஞ்சிதபாதம், வாளி நாதன், மகாதேவன், அப்பு, குஞ்சு, இல்லை நம்பி, தங்கவேலு ஆகியோர் பேசினர். தோழர் ராஜரத்தினம் மணமக்களை வாழ்த்திப் பாடினார்.

16-7-45 சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் தோழர்கள் காசிநாதன்-குணபூஷணம் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் பக்தவத்சலம் பி. ஏ., எல். டி., தலைமையில் நடைபெற்றது. மாலையில் தோழர் அம்மணியம்மாள் இல்லத்தில் விருந்து நடந்தது. இத்திருமணத்தின் நினைவாக "குடி அரசு"க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

கும்பகோணம் மகாமகக் குளக் கரை [illegible] தோழர் பழனிச்சாமி தலைமையில் சென்னை தோழர் இளங்கோவனுக்கும், பாலாம்பாள் அம்மையாருக்கும் சுயமரியாதை வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் கே. கே. சிவராமன், வி. சின்னத்தம்பி, எஸ். கே. சாமி, ஆர். சவுரிராஜன் ஆகியோர்கள் பேசினார்கள். சென்னைத் தோழர் கே. வேங்கடசாமி மணமக்களுக்கு நன்றி கூறினார்.

திருமலைராயன்பட்டினம் தோழர் சு [illegible] முருகைய நாடாருக்கும், காரைக்கால் தோழர் வெங்கடாசலம் [illegible] மணமகள் இல்லத்தில் 26-8-45 இரவு 10-30 மணிக்கு தோழர் [illegible] தலைமையில் [illegible] நடைபெற்றது. [illegible] பதிவு திருமணம் [illegible] படி மணம் நடத்திவைக்கப்பட்டது. இதன் நினைவாகக் 'குடி அரசு', 'திராவிடநாடு' பத்திரிகைகளுக்கு ரூ. 1 வீதம் நன்கொடையளிக்கப்பட்டது. காரை திராவிடர்களின் சார்பாக தோழர் சிவம் மணமக்களுக்குத் தன் வாழ்த்துதலைத் தெரிவிக்கிறார்.

திருநகர் திராவிடர் கழக அமைச்சராகிய தோழர் என். ஜெயராமனுக்கும் வள்ளியம்மைக்கும் 26-8-45 காலை 10 மணிக்கு திருமணம் தோழர் சுந்தரம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் க. வெ. கி. சம்பத், டி. எம். சடகோபன், கே. கிருஷ்ணன், செண்பகம் அம்மையார் முதலியோர் சொற்பொழிவாற்றினர். மணம் முடிந்ததும், மற்றும் இருவருடன் மணமகன் "கடவுள், கடவுள்" என்ற பாரதிதாசன் பாடலை உணர்ச்சியுடன் பாடியது போற்றத்தக்கது. உள்ளூர் வெளியூர்த் தோழர்கள் பெருவாரியாக வந்திருந்தனர். இத்திருமணத்தின் நினைவாகக் 'குடி அரசு'க்கு ரூ 2 நன்கொடை அனுப்பப்பட்டது.

சென்னை சுயமரியாதை இயக்கத் தோழர் எஸ். பிரகாசத்திற்கும் சிவசக்தி அம்மையாருக்கும் 3-9-45 பெத்துநாயக்கன்பேட்டையில் சீர்திருத்த மணம் நடைபெற்றது. தோழர் கா. மு. ரத்தினம் தலைமையில் தோழர்கள் டி. சண்முகம், டி. சீனிவாசன் பி. ஏ. (ஆனர்ஸ்) எஸ். கஜேந்திரன் பி. ஏ., என். வி. நடராஜன் ஆகியோர் 'வாழ்க்கை ஒப்பந்தமும்—சுயமரியாதை இயக்கமும்' என்பது பற்றிப் பேசினர்.

மணமகன் மணமக்களுக்கும் நன்றி கூறி, சென்னை சு. ம. சங்கத்துக்கு ரூ. 5 நன்கொடை கொடுத்தார். திருமணத்திற்கு ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர்.

பட்டுக்கோட்டையில் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்களது சிறிய தகப்பனார் பிள்ளையை சாமி அவர்கள் மகள் தோழர் கே. ராஜூவுக்கும், கந்தசாமி நாயுடு மகள் சாவித்திரி அம்மையாருக்கும் தோழர் என். வலிகண்டிருஷ்ண நாயுடு பி. ஏ., பி. எல்., தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கிருஷ்ணசாமி பி. ஏ., பி. எல்., என். பி. சுப்பிரமணியன், ராஜகோபால் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாகக் 'குடி அரசு', 'திராவிடநாடு' சு. ம. சங்கம் ஆகியவைகளுக்கு ரூ. 1 வீதம் நன்கொடை அளிக்கப்பட்டது.

[illegible] தெற்கு வீதி தோழர் சுப்பையா மணமகள் இல்லத்தில் 2-9-45 மாலை [illegible] சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற வைதீகம்—விதவையின் திருமணத்தில் தோழர்கள் எஸ். ஆர். சுப்பண்ணா, பிச்சையா முதலியோர் பேசினர்.

நாகூர் தோழர் தம்புசாமி பிள்ளை மகன் சுப்பிரமணியனுக்கும், திருமலைராயன்பட்டினம் குப்புசாமி பிள்ளை மகள் தனிக்கோடி அம்மாளுக்கும் தமிழ்த் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பகோணம் தோழர் ருக்மணிக்கும் திருமருகல் தோழர் மூ. பாலசுப்ரமணியனுக்கும் சாக்கோட்டை தோழர் எஸ். ஆர். சாமி தலைமையில் 9-9-45 காலை திருமணம் நடைபெற்றது. தோழர்கள் அழகிரிசாமி, பிச்சையன், பாலன், நடேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் பொன்னுசாமி பாடினார். தோழர் தெய்வசிகாமணி நன்றி கூறினார்.

## திராவிட ஏழை மாணவர் கல்வி உதவி நிதி

சாக்கோட்டை, கும்பகோணம்,
(தஞ்சை ஜில்லா)

இந்நிதி திராவிட மக்களின் கல்வி முன்னேற்றம் கருதித் தொடங்கப்பெற்றது. இந்நிதியின் மூலம் ஏழை மாணவ, மாணவிகள் கல்வி கற்பதற்கு இலவசமாக உதவிபெற வழியுண்டு. இந்நிதி தக்க மானேஜிங்போர்டு நிர்வாகத்தில் நடைபெறுகிறது. இந்நிதி பல தலைவர்களின் ஆதரவையும் அனுமதியையும் பெற்றுள்ளது. இந்நிதிக்குள்ள அடையாளம் சிவப்பு சதுரத்தில் வெள்ளை நட்சத்திரம். இந்நிதியின் முக்கிய லட்சியம் கல்வியறிவைப் பரவச்செய்வதே. இந்நிதிக்கு ஒவ்வொருவரும் உதவி புரிய வேண்டுகிறோம்.

கே. கணபதி, தலைவர்.
எஸ். ஆர். சாமி, கௌரவகாரியதரிசி.

## 'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது) 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5-0-0. தபால் செலவு பிரத்தியேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.

Edited, Printed, and Published by N Karivaradaswamy at the Tamilian Press 42 Gaucbery street, Erode.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை